
# நற்செய்தி கதைப்புத்தகம்

## நிகழ்ச்சி வழிகாட்டி



இந்த வழிகாட்டியிலுள்ள கதைகள் யாவும் நற்செய்தி கதைப்புத்தகங்களில் உள்ளன. வேத மனப்பாட வசனங்கள் பரிசுத்த வேதாகமம்: எளிய பதிப்பு (ERV) © 2012, World Bible Translation Center. Inc –லிருந்து அவர்களது அனுமதியுடன் எடுக்கப்பட்டுள்ளன.

நற்செய்தி கதைப்புத்தகம்  நிகழ்ச்சி வழிகாட்டி கருத்து உரிமை 2014. இந்தியாவில் அச்சிடப்பட்டது. மேலும் விபரங்களுக்கு: WBTC India, P.O. Box 8478, Bangalore 560084.
Email: info@wbtcindia.com

# உள்ளடக்கம்


முன்னுரை ..................................2-3

வரைந்து விவரிப்பது எப்படி? ......4-5

பாடம் 1 .....................................6-9

பாடம் 2 ................................10-13

பாடம் 3 ................................14-18

பாடம் 4 ................................19-23

பாடம் 5 ................................24-27

பாடம் 6 ................................28-31

பாடம் 7 ................................32-34

பாடம் 8 ................................35-38

பாடம் 9 ................................39-42

பாடம் 10 ..............................43-46

பாடம் 11 ..............................47-49

பாடம் 12 ..............................50-52

பாடம் 13 ..............................53-55

பாடம் 14 ..............................56-58

பாடம் 15 ..............................59-62

பாடம் 16 ..............................63-66

பாடத் திட்டம் ............................67

ஜெபம் ........................................68

# முன்னுரை



**ஒரு காரியத்தை செய்து பார்ப்பதன் மூலம் மக்கள் சிறப்பாகக் கற்கிறார்கள்.**
*எடுத்துக்காட்டு: வரைதல், எழுதுதல், பாடுதல், நடித்தல், கவனித்தல் அல்லது பேசுதல்.*

ஒரு காரியத்தை செய்து பார்ப்பதன் மூலம் மக்கள் சிறப்பாகக் கற்கிறார்கள்

**ஒரு கருத்துப் பொருளைக் கற்பிப்பதன் மூலம் மக்கள் சிறப்பாகக் கற்கிறார்கள்.**

ஒரு பாடத்திலுள்ள கதை, செய்கைப் பாடல், பொருள் கண்டு கற்றல், மனப்பாட வசன விளையாட்டு மற்றும் அனுதின வாழ்வில் நடைமுறை செயல்படுத்தல் ஆகிய அனைத்தும் ஒரே கருப்பொருளைக் கொண்டிருக்கும். *எடுத்துக்காட்டு:* 'இயேசுவே உலகத்தின் ஒளி' என்ற கருத்தை அப்பாடத்திலுள்ள அனைத்து செயல்முறைகளும் வெளிப்படுத்தும்.

**மீண்டும், மீண்டும் செய்வதன் மூலம் மக்கள் சிறப்பாகக் கற்கிறார்கள்.**

*எடுத்துக்காட்டு: நற்செய்தி கதைப்புத்தகங்களில்* உள்ள ஒரு கதையைக் குழந்தைகளுக்குக் கூறுங்கள். பின் ஒரு குழந்தையை மறுபடியும் அக்கதையைச் சொல்ல வையுங்கள். பின்பு மற்றொரு குழந்தையை அதே கதையைத் திரும்பவும் சொல்ல வையுங்கள். அதன் பின்பு குழந்தைகளை அக்கதையை வரையச் சொல்லுங்கள். அல்லது அக்கதையைக் குறித்த கேள்விகளைக் குழந்தைகளிடம் கேளுங்கள்.

ஒரு கருத்துப் பொருளைக் கற்பிப்பதன் மூலம் மக்கள் சிறப்பாகக் கற்கிறார்கள்

**நற்செய்தி கதைப்புத்தகம் நிகழ்ச்சி வழிகாட்டி**

*இந்த நற்செய்தி கதைப்புத்தகத் தொடரில்* 16 பாடங்கள் உள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் *நற்செய்தி கதைப்புத்தகத்திலுள்ள* ஒரு கதை, ஒரு செய்கைப் பாடல், பொருள் கண்டு கற்றல், ஒரு மனப்பாட விளையாட்டு மற்றும் அனுதின வாழ்வில் நடைமுறை செயல்படுத்தல் போன்றவை இருக்கும். குழந்தைகள் ஒவ்வொரு பாடத்திலும் ஏதாவது ஒரு செயலைச் செய்வார்கள்.

ஒவ்வொரு பாடத்திலும் எவ்வளவு விளக்கவுரைகளைப் பயன்படுத்துவது என்பது குழந்தைகளோடு நீங்கள் செலவிடும் நேரத்தையும், குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் புரியும் தன்மையையும் கொண்டு அமையும். கண்டிப்பாக ஒவ்வொரு பாடத்திலும் *நற்செய்தி கதைப்புத்தகத்திலுள்ள* கதையும், செய்கைப் பாடலும், அனுதின வாழ்வில் நடைமுறை செயல்படுத்தலும் குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்பட வேண்டும்.

மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் மக்கள் சிறப்பாகக் கற்கிறார்கள்

இந்தத் தொடரின் ஒவ்வொரு நிலையின் முடிவிலும், ஒவ்வொரு குழந்தைக்கும் அந்தந்தப் பாடம் மற்றும் கதை அடங்கிய *நற்செய்தி கதைப்புத்தகப்* பிரதி கொடுக்கப்பட வேண்டும். *நற்செய்தி கதைப்புத்தக* நிகழ்ச்சியின் இறுதியில் ஒவ்வொரு குழந்தையும் ஆறு புத்தகங்கள் பெற்றிருக்க வேணடும்.



**ஒரு செய்கைப் பாடல்:** இப்பாடலின் வரிகளும், செய்கைகளும் மிக எளிதாகவும் கற்க சுலபமாகவும் இருக்க வேண்டும். நீங்கள் அறிந்த பாடலையோ, அல்லது ஒரு பாடலைத் தெரிந்த ராகத்திலோ, சொந்தமாக வார்த்தைகளை அமைத்துக் கற்றுத்தரலாம். அப்பாடல் அந்நாளின் கருத்துப் பொருளைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

அப்பாடல் குழந்தைகள் மனதில் பதியும்வரை திரும்பத் திரும்பச் செய்கையுடன் பாடிக் காட்டுங்கள்.

**ஒரு பொருள் கண்டு கற்றல்:** அன்றாட வாழ்வில் குழந்தைகள் காணும் ஒரு பொருளைக் கொண்டு, அப்பாடத்தில் தேவனைப் பற்றிய கருத்துப் பொருளை கற்பிப்பது பொருள் கண்டு கற்றல் ஆகும்.

*எடுத்துக் காட்டு: 'இயேசுவே உலகத்தின் ஒளி'* என்ற கருப்பொருளுக்கு: ஒரு அறையின் விளக்குகளை அணைத்து இருட்டாக்குங்கள். ஒரு சிறு மெழுகுவர்த்தியை ஏற்றி அது எப்படி இருளை அகற்றி வெளிச்சம் வீசுகிறது என்பதைச் செய்து காட்டுங்கள். பின், இயேசுவும் எவ்வாறு ஒரு மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தைப் போல் ஆவிக்குரிய வெளிச்சமாய் தீய ஆவிகளினால் உண்டாகும் ஆவிக்குரிய இருளைப் பின்தள்ளி, நாம் சொன்ன, நினைத்த, செய்த எல்லாத் தீய காரியங்களையும் பின் தள்ளுகிறார் என்பதை எடுத்துக் கூறுங்கள்.

**ஒரு மனப்பாட வசன விளையாட்டு:** குழந்தைகள் கருப்பொருளைக் கற்கவும், வேத வசனத்தை எளிதாக நினைவு கொள்ளவும் *நற்செய்தி கதைப்புத்தங்களில்* வேத வசன விளையாட்டுகளும் உண்டு. *எடுத்துக்காட்டு:* ஒரு வேத வசனத்தை ஆசிரியர் நடித்துக் காட்ட, (பேசாமல், சத்தம் எழுப்பாமல்) குழந்தைகள் அது என்ன என்று ஒவ்வொருவராக யூகித்துச் சொல்ல வேண்டும். புதையல் வேட்டை, யூகிக்கும் விளையாட்டு என்று பலவகை விளையாட்டுகளும் உள்ளன.


**நடைமுறை செயல்படுத்தல்:** ஒரு கருப்பொருளை நம் அன்றாட வாழ்வில் எவ்வாறு செயல்படுத்த முடியும் என்று அறிய வேண்டியது மிக முக்கியம். *எடுத்துக்காட்டு:* இயேசுவே உலகின் ஒளி: நாம் இயேசுவை விசுவாசிக்கும் போது, அவர் நம் ஆவிக்குரிய வெளிச்சமாயிருந்து எல்லா தீய ஆவிகளையும் நம்மைவிட்டு அகற்றுகிறார். தீய ஆவிகளுக்கு நம்மேல் வல்லமை கிடையாது.


# வரைந்து விவரிப்பது எப்படி

இந்த வழிகாட்டி முழுவதிலும் ஒவ்வொரு கதையையும் நீங்கள் வரைந்து விளக்க சித்திரங்கள் உள்ளன. இப்பக்கத்தில் நீங்கள் விரைவாக வரையக் கற்றுக்கொள்ள படிப்படியான ஒரு எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டுள்ளது.


நீங்கள் வரைந்து கதை சொன்ன பிறகு, குழந்தைகளும் அக்கதையின் சித்திரத்தை எளிதாக வரைந்து கொள்ளமுடியும்.


**தேவையான பொருட்கள்:** கரும்பலகை மற்றும் சுண்ணாம்பு  எழுதுகோல், அல்லது மணலும் குச்சியும், அல்லது காகிமுதம் எழுதுகோலும். குழந்தைகளுக்கு எழுதுகோல், மற்றும் காகிதம் அல்லது வரைபடக் காகிதம் மற்றும் அழிப்பான் கொடுக்க வேண்டும்.















# பாடம் 1



சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்

## ஒரு கருத்துப் பொருள்

*சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்*

## வேதாகமக் கதை

***சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்று கற்பிக்கும் கதையைக் கூறுங்கள்***

**நற்செய்தி கதைப்புத்தம் ஒன்று. பக்கம் 2-9.** *சிருஷ்டிகரான தேவன்.*


**தேவையான பொருட்கள்:** வரைவதற்குக் கரும்பலகையும் சுண்ணாம்பு எழுதுகோலும், அல்லது மண், குச்சி அல்லது காகிதமும் எழுதுகோலும். குழந்தைகளுக்கு வரைபடக் காகிதம் அல்லது காகிதம் மற்றும் எழுதுகோல், அழிப்பான்.



கதையைப் படமாக வரைந்து விவரியுங்கள். ஒவ்வொரு பக்கத்தையும் வாசித்த பின் குழந்தைகளிடம் ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

1, 2, 3 கதையைத் தொடங்குங்கள்…

நட்சத்திரங்களை என்னால் பார்க்க முடிகிறது. நட்சத்திரங்கள் பாடுகின்றன.



**கேள்வி: சிருஷ்டிகரான தேவன் எதை உண்டாக்கினார்?**
குழந்தைகள்: நட்சத்திரங்கள்.

மிருகங்களை என்னால் பார்க்க முடிகிறது. மிருகங்கள் பாடுகின்றன.

**கேள்வி: சிருஷ்டிகரான தேவன் எவற்றை உண்டாக்கினார்?**
குழந்தைகள்: மிருகங்கள்.



ஆவிகளை என்னால் பார்க்க முடிகிறது. ஆவிகள் பாடுகின்றன.

**கேள்வி: சிருஷ்டிகரான தேவன் என்ன உண்டாக்கினார்?**
குழந்தைகள்: ஆவிகள்.



முதல் மனுஷனையும் மனுஷியையும் என்னால் பார்க்க முடிகிறது. முதல் மனுஷனும் மனுஷியும் பாடுகிறார்கள்.

# பாடம் 1



**கேள்வி: சிருஷ்டிகரான தேவன் யாரை உண்டாக்கினார்?**
குழந்தைகள்: முதல் மனுஷனையும் மனுஷியையும்.

சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, 'நான் உன்னை நேசிக்கிறேன்!' நான் பாடத் துவங்குகிறேன்.

**கேள்வி: சிருஷ்டிகரான தேவன் என்ன கூறினார்?**
குழந்தைகள்: நான் உன்னை நேசிக்கிறேன்!


சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்

சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, 'என்னுடைய முழுமையான உலகைக் கவனித்துக்கொள்.'

**கேள்வி: சிருஷ்டிகரான தேவன் என்ன கூறினார்?**
குழந்தைகள்: பூரணமான என் உலகைக் கவனித்துக்கொள்.

எல்லாவற்றையும் என்னால் கேட்க முடிகிறது பாடல்... பாடல்... பாடல்.

சிருஷ்டிகரான தேவனை எல்லாம் பாடுகின்றன. சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்.



**குழந்தைகளை இக்கதையைச் சித்திரமாக வரையச் சொல்லுங்கள்.**

## செய்கைப் பாடல்

***சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்பதை விளக்க ஒரு செய்கைப் பாடலை உபயோகியுங்கள்***

அகிலத்தையும் ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவர் நீர் சிருஷ்டித்தீரே
உந்தன் வல்ல கரத்தினாலே

ஆகாதது ஒன்றும் இல்லை உம்மால்
ஆகாதது ஒன்றும் இல்லை
சர்வ வல்லவரே கனமகிமைக்கு பாத்திரரே
ஆகாதது என்று ஏதுமில்லை உம்மால் } 2
ஆகாதது ஒன்றுமில்லை

# பாடம் 1

## பொருள் கண்டு கற்றல்

*சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்*

சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்

**கவனித்துப் பாருங்கள்:** மேகங்களைப் பாருங்கள், ஒவ்வொரு மேகமும் மேகம் தான். ஆனால் மற்ற மேகத்திலிருந்து மாறுபட்டுள்ளது. இரவில் நட்சத்திரங்களைப் பாருங்கள், ஒவ்வொரு நட்சத்திரமும் வெவ்வேறு வண்ணமும், அளவும் கொண்டுள்ளது. மாடுகளைப் பாருங்கள், ஒவ்வொரு மாடும் வேறுபட்டுள்ளது. மனிதனைப் பாருங்கள், ஒவ்வொரு மனிதனும் மனிதன் தான். ஆனால் ஒவ்வொரு மனிதனிடமும் எத்தனை வித்தியாசங்கள் உள்ளன. மனுஷியைப் பாருங்கள், ஒவ்வொரு மனுஷியும் மனுஷிதான், ஆனால் ஒவ்வொருவரும் தனித்தன்மை உடையவராய் இருக்கின்றனர்.

எல்லாவற்றையும் உண்டாக்கின சிருஷ்டி கர்த்தர் ஒருவரே. சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். தேவன் சிருஷ்டித்த எல்லாம் ஒரே இனமாயினும் ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டுள்ளது.

## மனப்பாட வசன விளையாட்டு


***சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்று கற்பிக்கும் வேத வசனத்தை உபயோகியுங்கள்***



*கர்த்தர்* என்பது சிருஷ்டிகரான தேவனின் மற்றொரு நாமம் என்று விளக்குங்கள்.

**சங்கீதம் 146:1 மற்றும் 6** *'கர்த்தரை துதி! என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதி! கர்த்தர் பரலோகத்தையும், பூமியையும் உண்டாக்கினார். கர்த்தர் கடலையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார். கர்த்தர் அவற்றை என்றென்றும் பாதுகாப்பார்.'*





**புதையல் வேட்டை:** ஐந்து துண்டு காகிதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். முதல் துண்டில், 'கர்த்தரை துதி!' என்று எழுதி, (அதன் பின்பக்கத்தில் ஒருவர் கர்த்தரைத் துதிப்பதுபோல் வரைந்து கொள்ளுங்கள்.) இதுபோல் இரண்டாம் துண்டில், 'என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதி!' என்று எழுதி (அதன் பின்னால் ஒருவர் தன் உள்ளத்திலிருந்து ஸ்தோத்திரிப்பதைப்போல் ஒரு படத்தை வரைந்து கொள்ளுங்கள்.) மூன்றாம் துண்டில், 'கர்த்தர் பரலோகத்தையும், பூமியையும் உண்டாக்கினார்.' என்று எழுதி (அதன் பின்னால் வானத்தையும், பூமியையும் சித்தரிக்கும் ஒரு படத்தையும்,) நான்காம் துண்டில், 'கர்த்தர் கடலையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார்.' என்றும் எழுதி (அதன் பின்னால் கடலையும், மீனையும் வரைந்து கொள்ளுங்கள்.) ஐந்தாம் துண்டில், 'கர்த்தர் அவற்றை என்றென்றும் பாதுகாப்பார்.' என்று எழுதி (அதன் பின்புறத்தில் தேவன் கையில் உலகம் இருப்பதுபோல் வரைந்து கொள்ளுங்கள்.) பின் அவற்றை தனித்தனியே மடித்து, குழந்தைகள் வருமுன் ஐந்து இடங்களில் மறைத்து வையுங்கள். அவற்றைக் குழந்தைகள் கண்டுபிடிக்க ஏதுவாக ஐந்து இடங்களுக்கும் எளிதான வரைபடங்களை தனித்தனியாக வரைந்து கொள்ளுங்கள்.

# பாடம் 1

குழந்தைகளை ஐந்து அணிகளாக பிரியுங்கள். (5 பேருக்குக் குறைவாகவே இருப்பார்கள் என்றால் அனைவரும் ஒரே அணியாக ஒவ்வொரு வரைபடமாகக் கண்டுபிடிக்க வேண்டும்.) வயதில் மூத்த குழந்தை அணித் தலைவராக இருந்து மற்ற இளங்குழந்தைகளுக்கு உதவ வேண்டும். ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரைபடத்தைக் கொடுங்கள். அல்லது ஆசிரியரே ஒவ்வொரு அணிக்கும் குறிப்பைச் சொல்லி, 'புதையல்' கண்டுபிடிக்க உதவலாம்.

மனப்பாட வசனத்தில் தங்கள் பகுதியை முதலில் கண்டடையும் அணியே வெற்றி பெற்றவராவர்.

1, 2, 3 வேட்டை தொடங்கட்டும்...

ஐந்து அணிகளும் வேத வசனம் எழுதிய காகிதத்துண்டாகிய தங்கள் புதையலைக் கண்டடைந்த பின் அணிக் குழந்தைகளே தங்கள் அணித் தலைவரைத் தேர்வு செய்ய வேண்டும். ஐந்து அணித்தலைவர்களும் சேர்ந்து அந்த வசனத்தை அல்லது சித்திரங்களைச் சரியான வரிசையில் அமைக்க வேண்டும். ஐந்து அணித்தலைவர்களும் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும். வசனத்தைச் சரியாக அமைத்தவுடன் அவர்களுக்கு அறிவியுங்கள்.

பின் அணித்தலைவர்கள் வசனத்தை உயரத் தூக்கிப் பிடித்தோ அல்லது வசனத்தைச் சரியாகக் கூறவோ வேண்டும். அப்பொழுது மற்றக் குழந்தைகள் அனைவரும் சத்தமாக ஒவ்வொரு வரியாக வசனத்தைக் கூற வேண்டும்.

சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்

குழந்தைகள் இன்னும் எழுத வாசிக்க அறியாதவர்களானால், சித்திரங்களைக் காண்பித்து அவர்கள் நினைவில் கொள்ளும்படி வசனத்தைக் கூறுங்கள். அவர்கள் நினைவில் கொள்ளும்வரை சத்தமாகத் திரும்பத் திரும்பச் சொல்லச் சொல்லுங்கள். வசனத்தைக் குழந்தைகளிடமிருந்து மறைத்து, அவர்களை மனப்பாடமாக வசனத்தைச் சொல்லச் சொல்லுங்கள்.

## நடைமுறைப் பயன்பாடு

***சிருஷ்டிகரான தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினார், என்று கற்பிக்கும் நடைமுறைப் பயன்பாட்டை கற்றுக் கொடுங்கள்***

சிருஷ்டிகரான தேவன் உன்னையும், என்னையும் உலகனைத்தையும் சிருஷ்டித்தார். சிருஷ்டிகரான அவர் மட்டுமே துதிக்குப் பாத்திரமானவர், ஏனென்றால் சிருஷ்டிகரான தேவனே எல்லாவற்றையும் உண்டாக்கினார்.

ஜெபம்: சிருஷ்டிகரான தேவனே, நீரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தீர். நீரே உலகத்தை உண்டாக்கினீர். ஆகவே நாங்கள் உம்மை மட்டும் தொழுவோம். எல்லாவற்றை சிருஷ்டித்தமைக்கு நன்றி. என்னை நேசிப்பதற்காக உமக்கு நன்றி. ஆமென்.